| O.S.No. 34/2008 | DW5: திருமதி. சாந்தி (எ) மீனாட்சி<br>க/பெ. திரு. வெங்கடேசன் | 07-10-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

(வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பபட்டதால் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையானது முடித்து வைக்கப்படுகிறது.)

**<u>2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வாதிகள் ஆண்டாள், லலிதா, மல்லிகா, நான் ஆகியோர் 1–ம் பிரதிவாதி கண்ணப்பிள்ளையின் முதல் மனைவியின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். கண்ணப்பிள்ளையில் முதல் மனைவி பவுனம்மாள் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். பவுனம்மாள் காலமானதற்கு பிறகு 2–ம் பிரதிவாதி பாலம்மாள் என் தந்தையை சென்னை வடபழனியில் 2–வது திருமணம் செய்து கொண்டார். கண்ணபிள்ளைக்கும் பாலமாளுக்கும் பிறந்தவர்கள்தான் 3, 4 பிரதிவாதிகள் மற்றும் ஒரு சுரேஷ்குமார் என்று சொன்னால் சரிதான். சுரேஷ்குமர் திருமணமாகாமல் காலமாகிவிட்டார். வாதிகளுக்கு 1980–ம் ஆண்டுக்கு முன்னரே திருமணமாகிவிட்டது.

2. எனக்கு இளங்கோவன் என்பவருடன் முதல் திருமணம் நடந்து அவர் காலமாகிவிட்டார் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. இளங்கோவன் இறந்தபிறகுதான் எனக்கு இரண்டாவதாக வெங்கடேசனுடன் திருமணம் செய்து வைத்தனர் என்றால் அவ்வாறு இல்லை, எனது முதல் கணவர் வெங்கடேசன்தான். எனக்கு ஏற்கனவே இளங்கோவனுடன் திருமணம் நடந்து அவர் இறந்ததற்கு பிறகு இரண்டாவதாக வெங்கடேசன் என்பவரை திருமணம் செய்துகொண்டேன் என்றாலும், அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் அது எனக்கு ஞாபகமில்லை.

3. எனது தந்தை கண்ணபிள்ளை சார்பதிவாளராக பணி செய்து ஓய்வு பெற்றார். எனது தந்தை 2-ம் பிரதிவாதி பாலம்மாளை 1978-ல் திருமணம் செய்துகொண்டார் என்றால் வருடம் ஞாபகமில்லை. எனது தந்தை சுமாராக 1988-ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றார். அவர் காலமானபோது சுமார் 85 வயது இருக்கும். எனது தந்தை இறக்கும் வரை ஓய்வு பலனை என் தந்தைதான் வாங்கி வந்தார் என்றால் சரிதான். கொடநகரில் உள்ள சர்வே எண். 305/2 ஆனது என் தாத்தாவிற்கு சொந்தமான சொத்து ஆகும். அதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 2-ம் பிரதிவாதி 04.06.1979-ல் வேதபுரி, வடிவேலு ஆகியோரிடம் சொத்துக்களை கிரையம் வாங்கி மனைப்பிரிவுகளாக விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1988-ம் ஆண்டிலிருந்து சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4. வழக்கு சொத்து 2-ம் பிரதிவாதியும், எனது தந்தை கண்ணப்பிள்ளை ஆகியோர் கூட்டாக சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தைத்தான் நான் தாக்கல் செய்த அ.வ.எண். 77/1999 என்ற வழக்கில் காண்பித்தேன் என்று சொன்னால் சரிதான். அது பாகப்பிரிவினை வழக்காகும். மேற்படி வழக்கில் வாதிகள் 3 முதல் 5 பிரதிவாதிகள் ஆவார்கள். அந்த வழக்கில் வாதிகள் வழக்கறிஞரை வைத்து பதில் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கில் இருதரப்பில் இருதரப்பு சாட்சிகளும் விசாரிக்கப்பட்டார்கள். நான் அந்த வழக்கினை இந்த வழக்கில் பரிகாரம் தேடிக்கொள்கிறேன் என்று வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்று சொன்னால் சரிதான். வாதிகளுடன் நான் பேசுவேன், எங்களுக்குள் சண்டை எதுவும் இல்லை. நாங்கள்

அனைவரும் ஒன்று சேர்ந்து ஏற்கனவே போட்ட வழக்கை வாபஸ் வாங்கிக்கொண்டு இந்த வழக்கினை நடத்தி வருகிறோம் என்றாலும், வழக்கினை காலதாமதப்படுத்தி வருகிறோம் என்றாலும் சரியல்ல.

5. எனது தந்தை 29.05.2014 – ல் காலமானார். எனது தந்தை 2–ம் பிரதிவாதியை திருமணம் செய்து கொண்ட பிறகு செய்யாரில் இருந்தால், அதற்கு பிறகு பசங்களை படிக்க வைப்பதற்கான சென்னை குடியேறி அங்கு வசித்து வந்தார். வழக்கு சொத்துக்கள் பாதி 1–ம் பிரதிவாதிக்கும், பாதி 2–ம் பிரதிவாதிக்கும் சொந்தம் என்று சொன்னால் அவ்வாறு இல்லை. எனது தந்தை 05.05.2014–ல் எனது தந்தை A ஷெட்யூல் சொத்து சீனிவாசனுக்கும், B ஷெட்யூல் சொத்து நரேஷ்பாபுவுக்கும், C ஷெட்யூல் சொத்து இரண்டு பேரும் சேர்ந்து அடைய வேண்டும் என்றும் D ஷெட்யூல் சொத்து 2–ம் பிரதிவாதிக்கும் என உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. என் தந்தை எழுதிய உயிலை எதிர்தரப்பினர் தாக்கல் செய்துள்ளதை பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை. உயில் தாக்கல் செய்யும்போது போட்ட மனுவிற்கு பதில் போட்டீர்களா என்றால் ஞாபகமில்லை. மோகனம், எழிலரசன் ஆகியோர் எனது வீட்டில் குடியிருந்தார்கள். மேற்படி உயில் குறித்து இருவரும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான்.

6. நான் தற்போது இருக்கும் இடமானது 2/39, ஆதிகேசவ பெருமாள் கோயில் தெரு ஆகும். மேற்படி சொத்தானது பழனிமுதலி தெருவிலிருந்து நீண்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தின் நீளம் மற்றும் அகலம் தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. ஆண்டாளின் கணவர் பெயர் பாலசுந்தரம். 8–வது அயிட்ட சொத்தில் பாதியை 1–ம் வாதியின் கணவர் பாலசுந்தரத்திற்கு எனது தந்தை

பொது அதிகார பத்திரம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி சொத்தில் பாதியினை என் தந்தை வைத்திருந்தார். அதுதான் தாவா 8-வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது. தாவா 8-வது அயிட்ட சொத்தில் 2-ம் பிரதிவாதி நகராட்சியில் அனுமதி பெற்று மெத்தை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான், அதன் அடிமனை என் தாத்தாவின் பூர்வீக சொத்து ஆகும். 15.07.1994-ல் பி.சா.ஆ.7 கிரைய பத்திரம் முன்னிலைக்கு நாங்கள் என் மாமாவிடம் கிரையம் வாங்கினோம் என்று சொன்னால் சரிதான்.

7. பூர்வீக சொத்தில் எனக்கு என் தந்தை பாகம் கொடுத்துவிட்டார் என்றாலும், பூர்வீக சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தினை 1-ம் பிரதிவாதி அவரது பென்ஷன் மூலம் வந்த வருமானத்தைக்கொண்டு வாங்கினார் என்றாலும், 2-ம் பிரதிவாதி அவரது தனிப்பட்ட வருவாயைக் கொண்டு வாங்கினார் என்றாலும், அதில் நான் எவ்வித பாக உரிமையும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

8. திருமணம் ஆன நாள் முதல் வாதிகள் சென்னையிலும், நான் செய்யாரிலும் தனித்தனியாக வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்து வருகிறோம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தினை என் தந்தை பி.சா.ஆ.8 உயில் முன்னிலைக்கு பாத்தியப்படுத்திவிட்டதால் அதில் நான் எவ்வித பாக உரிமையும் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிகளோடு சேர்ந்து தவறாக பாகம் கேட்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கும் எனக்கும் எவ்வித

உரிமையும் இல்லை என்றாலும், அதனால் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.10.07 12:40:21 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**